**IN THE COURT OF THE ASSISTANT SESSION JUDGE OF ATTUR**

**SC.No.396/2018**

**Deposition of: PW2(LW1)**

**Name** :மணிகண்டன் **Father Name :**

**Village** : **Taluk** :

**Nationality** : **Religion** :

**Calling** : **Age** :

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969**
**Date: 02.01.2023 at 2.37 P.m to 2.54 P.m**

முதல் விசாரணை:

நான் வடக்குகாட்டில் வசித்து வருகிறேன். என் மகன் பெயர் விக்னேஷ். நான் என்னுடைய நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். அதற்காக நான் கடன் வாங்குகிறேன். அதில் 1ம் எதிரியிடம் நான் ரூ.4 லட்சம் கடன் வாங்கியிருந்தேன். 1 1/2 வருடத்தில் திருப்பி தருவதாக சொல்லியுருந்தேன். அவர் ரூ.4,50,000/- த்திற்கு சாந்தி என்பவர் பெயரில் ஒரு கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டார். அது சம்மந்தமாக நான் 1ம் எதிரியிடம் கேட்டேன். ஏன் இவ்வாறு விலை அதிகமான சொத்தை தவறாக ஒப்பந்தம் செய்தேன் என்பதற்கு உன்னால் என்ன முடியுமோ அதை செய்யுடா என்றார். அவர் எங்களை திட்டினார். மேற்படி கிரய ஒப்பந்தம் செல்லாது என இதே நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. 21.09.2014 ல் நான் டிரைவர் வேலை பார்த்துவிட்டு வீட்டில் படுத்துக்கொண்டிருந்தேன். இரவு 11 மணி அளவில் எங்கள் வீட்டின் முன்பு வெளியே வாடா தேவிடியா பயலே என திட்டினார். நான் வெளியேவந்து பார்த்தேன். அப்போது இரும்பு கம்பியால் என் மண்டையில் 1ம் எதிரி அடித்தார். அதற்கான சா.பொ.1 ஆகும். மேலும் என்னுடைய மணிக்கட்டிலும், முதுகு தோள்பட்டையிலும், மாதேஸ் காலலும் கையாலும் எட்டி உதைத்தார். துரைசாமி என் கை மணிக்கட்டை பிடித்து முறுக்கி கையை உடைத்துவிட்டார். மற்றும் அருள்மணி என்பவர், சின்னத்தம்பி, செந்தில், செல்வம் ஆகியவரும் என்னை கையாலும், காலலும் அடித்தார்கள். என்னை அடித்தபோது காப்பாற்ற வந்த என் தகப்பனார் ஈஸ்வரன் என்பவரை சா.பொ.2 ல் அடித்தார். மேலும் 7 பேர் ஒன்று சேர்ந்து என் தக்கப்னாரையும் என்னையும் தாக்கி என் தகப்பனாரை நீச்சல் தெரியாதவரை கிணற்றி தூக்கி போட்டுவிட்டார்கள். அப்போது முக்கால் கிணறு தண்ணீர் இருந்தது. அதன் பிறகும் எதிரிகள் 7 பேரும், என்னையும், என் மனைவி, தயாரையும் தாக்கினார்கள். ஈஸ்வரன்

கதை முடிந்தது, இனி நிலப்பிரச்சனை இருக்காது என்று வாங்கடா போலம் என்று சொல்லி சென்றனர். பிறகு நான் என் தகப்பனாரை பார்க்கசென்றேன். என் தகப்பனார் கிணற்றி என்னை காப்பாற்றுங்கள் என கத்திக்கொண்டிருந்தார். நான் தீயணைப்பு துறைக்கு போன் செய்தேன். அவர்கள் தான் வந்து தகப்பனாரை காப்பாற்றினார்கள். 108 ஆம்புலன்ஸ் வரவைழைத்து அழைத்துசென்றார்கள். என் தகப்பனாருக்கு இடது நெஞ்சு, கை ஆகியவற்றில் காயமாக இருந்தது. அதிகாலையில் தான் நாங்கள் மருத்துவமனையில் சேர்த்தோம். நான் கொடுத்த புகார் தான் அ.த.சா.1. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 24 ம் தேதி நான் மருத்துவமனையில் இருக்கும் போது தலைவாசல் போலிஸ் என்னை விசாரித்து எழுதிகொண்டார்கள் அதை என்னிடம் படித்துக்காண்பித்தார்கள் அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன். பிறகு மதியம் 1 மணிக்கு மருத்துவமனைக்கே லேப்டேப் கம்பியூட்டர் எடுத்துவந்து என்னிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>

சம்பவம் நடப்பதற்கு முன்பாக பல ஆண்டுகள் என் மாமா 1ம் எதிரிதான் தாவா சொத்தை குத்தகைக்கு ஓட்டிவந்தார் என்றால் ஆளில்லாததால் அதை பார்த்துக்க சொன்னேன். நானும் என் தகப்பனாரும் ஓட்டுநர் தொழில் செய்கிறேன். சம்பவத்தின் போது நாங்கள் சொந்தமாக லாரி மற்றும் நெல் அறுவை வைத்திருந்தேன். அதை நாங்கள் தான் பராமரித்து வந்தேன்.

(குறுக்குவிசாரணை எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**